ආයතනයේ නම	:	මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය යටතේ ඇති දෙපාර්තමේන්තු පහක්.*
පාර්ලිමේන්තු ප්‍රකාශනමාලා අංක	:	487

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ සහ ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் :		**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள ஐந்து திணைக்களங்கள்**
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்	:	**487**

பாராளுமன்ற பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக கௌரவ நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் நிலையியல் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிப்பு

Name of the Institution	:	**Five Departments under The Ministry of Finance, Planning and Economic Development.**
Parliamentary Series	:	**487**

Submission of the observations and measures taken by Hon. Minister of Finance, Planning and Economic Development under Standing Order No. 119(4) regarding the report tabled by the Committee on Public Accounts of Parliament, to the Parliament

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: MF06/10//PS/487
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.06.30

கௌரவ பாராளுமன்ற சபைத்தலைவர் ஊடாக,
மாண்புமிகு சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் தொடர்பாக பொதுக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிதித்துறைக்கு பொறுப்பான அமைச்சரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானங்கள் சமர்ப்பிக்கப்படுதல்

பொதுக் கணக்குகள் குழு அறிக்கையின் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 487

நிலையியற் கட்டளை இலக்கம். 119(4) இன் பிரகாரம், பொதுக் கணக்குகள் குழுவால் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், பொதுக் கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் / பரிந்துரைகள் / உத்தரவுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை உரிய அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி, பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் போது நடத்தப்பட்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மீதான விசாரணையின் அடிப்படையில் பொதுக் கணக்குகள் குழு (COPA) தொகுத்த அறிக்கை , பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 487-இல் அடங்கியுள்ளது. மாண்புமிகு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகிய நான் எனது தகுதிக்குட்பட்ட வகையில், இவ்விடயம் தொடர்பாக எனது கருத்துக்களையும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய அறிக்கையை இதன்மூலம் சமர்ப்பிக்கிறேன்.

பொதுக் கணக்குகள் குழுவால் தொகுக்கப்பட்ட அறிக்கையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயல்படும் திணைக்களங்கள் தொடர்பான பரிந்துரைகள் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயல்படும் ஐந்து திணைக்களங்களால் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன என்ற உண்மையை மாண்புமிகு பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகினறேன்.

ஒப்பம்
அநுர குமார திசாநாயக்க
நிதி ,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

* . මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය සහ අමාත්‍යාංශය යටතේ ඇති දෙපාර්තමේන්තු පහක්.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள ஐந்து திணைக்களங்கள்

Five Departments under the Ministry of Finance, Planning and Economic Development

අංකය இல்லை No.	දෙපාර්තමේන්තුවේ නම / துறையின் பெயர் / Name of Department
01.	දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව/ **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்/** Department of Inland Revenue
02.	ශ්‍රී ලංකා රේගු දෙපාර්තමේන්තුව/**இலங்கை சுங்கம்/** Sri Lanka Customs
03.	ශ්‍රී ලංකා සුරාබද්දු දෙපාර්තමේන්තුව/ **இலங்கை மதுவரித் திணைக்களம்/** Excise Department of Sri Lanka
04.	රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව / **அரசுக் கணக்குகள் திணைக்களம்** / Department of State Accounts
05.	ආනයන හා අපනයන පාලන දෙපාර්තමේන්තුව/ **இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்/** Import and Export Control Department

உள்ளடக்கம்

இலக்கம்	திணைக்களங்கள்	பக்க இலக்கம்
1.	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	114 – 137
2.	இலங்கை சுங்கம்	138 – 163
3.	இலங்கை மதுவரித் திணைக்களம்	164 – 165
4.	அரசுக் கணக்குகள் திணைக்களம்	166 – 167
5.	இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்	168 – 175

IRD

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 487

நிறுவனத்தின் பெயர் :- உள்நாட்டு இறைவரித்த திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பான செயற்குழுவினால் சபையில் சமர்பிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் தொடர்புடைய அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

இலக்கம்	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை திருத்தியமைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் / தற்போதய நிலை
(2019, 2020 மற்றும் 2021, நிதியாண்டிற்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் தற்போதைய செயற்சாதனை) ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட திகதி - 2023 நவம்பர் 15		
01.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கடந்த 5 வருடங்கள் மற்றும் இவ் ஆண்டில் இது வரை வரி வருமாணத்தினை சேகரிப்பது தொடர்பான புள்ளவிபரங்களை விளக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கணனி மூலமான சமர்பிப்பு (Computer presentation) மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் வரி வகைகள், (நேரடி வரி மற்றும் மறைமுக வரி தனித்தனியாக) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் வருமானத்தினை சேர்த்தல் (2018 – 2023) அரச வரி வருமானத்திற்கு மற்றும் தேறிய உள்நாட்டு உற்பத்தியிற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பு ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மொத்தம் (2018 – 2023) வருமான வரியின் மொத்தம் (2023), வரி செலுத்துநர்களின் வகைக்கு அமைய பல்வேறுபட்ட வரி வகைகளின் மொத்தம், நிலுவை வரி வருமானம் (2023) மாதாந்த வரி வருமானத்தின் செயற்சாதனை – 2023 மற்றும்	31.12.2025 இல் உள்ளபடியான நிலுவை வரி அறிக்கை புதுபிக்கப்பட்டு வருகின்றது. புதுபிக்கப்பட்ட கணனி தரவுகள் சமர்ப்பிப்பு (Computer Presentation) விரைவில் சமர்பிக்கப்படும் என்பதினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

	அந்தநத வரி வகைகளுக்கு அமைய வரி வருமானம் 2018-2023 போன்றன இச் சமர்பிப்பில் உள்ளடங்கியுள்ளது. இதற்கு அமைய, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கீழ் நிருவகிக்கப்படும் 11 வரி வகைகள் காணப்படுகின்றன. மொத்த அரச வருமானத்தில் 50% அண்மித்த அளவிற்கான பங்களிப்பு உள்நாட்டு இறைவரித திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் கடந்த ஒரு சில ஆண்டுகளுக்குள் வரிக் கொள்கையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு அமைய வரி வருமானம் குறைவடைந்துள்ளது: 2023.10.31 ஆம் திகதியன்று PAY As You Earn (PAYE) தவணைக் கொடுப்பனவு காரணமாக Individual and partnership வரி அளவு குறைவடைந்துள்ளதுடன் மொத்த மதிப்பீட்டுக்கு உட்பட்ட வரி வருமானத்தினை தாண்டி வரி சேரிக்கப்படவில்லை. வரி வருமான சேகரிப்பு எல்லை (Threshold) ஆதிகரிப்பு மற்றும் வரி வீதம் குறைவடைந்தமையினால் பெறுமதி சேர் வரி (VAT) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 வரை குறைவடைந்துள்ளது மற்றும், 2023 ஆம் ஆண்டிற்கான மொத்த வரி வருமானத்தினை சேகரிக்கம் மதிப்பீட்டிற்கு அமைய ரூபா 1667 பில்லியன் வருமான இலக்கில் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதளவில் 78.78% முன்னேற்றம் பெறப்பட்டுள்ளதாக இதன் மூலம் காண்பிக்கப்பட்டது.	

02.	<u>பெறுமதி சேர் வரி (VAT) வருமானம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கிடைத்தல்.</u> அநேகமான வர்த்தக நிறுவனங்களினால் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் VAT நிதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரியவாறு கிடைப்பதனை உறுதிப்படுத்த முடியுமா என்பது தொடர்பாக செயற்குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது. <u>புரிந்துரை</u> அவ் வர்த்தக நிலையத்தினால் வாடிக்ககையாளர்களிடம் அறவிடப்படும் VAT நிதியினை கணிப்பீடு செய்வதற்கான முறைகளை வகுப்பதற்காக அந் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் PoS machine (Point of Sale) ஊடாக புள்ளிவிபரங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அவ் இயந்திரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யும் கம்பனியுடன் கலந்துரையாள பொருத்தமான வேலைத்திட்டத்தினை வகுப்பதற்கு தலையீடு செய்யுமாறு செயற்குழுவினால் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் பி.க.உ. / க.உ. இற்கு பரிந்துரை செய்யப்பட்டது. நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் திறைசேரி பிரதி செயலாளரின் இலக்கம் MF06/4/IRD/COPA/2023 மற்றும் 2024.01.04 ஆம் திகதிய கடிதம் மூலம் POS இயந்திரத்தினை இலங்கைக்கு கொண்டு வரும் 20 நிறுவனங்களுக்கு அண்மித்த அளவு காணப்படுவதாகவும் அவர்களினால் வழங்கப்படும் சேவைகள் சமானவைகள் அல்ல என்றும் அந் நிறுவனங்களுடன் தனியாக கலந்துரையாடி அவர்களின் வாடிக்கையாளர்கள் VAT இற்காக	POS இயந்திரம் ஊடாக புள்ளவிபரங்களைப் பெற்றுக் கொள்வதாற்காக POS (Point of Sale) இயந்திரப் பயன்பாட்டினை கட்டாயப்படுத்த வேண்டும் என்று அடையாளம் காணப்பட்டது. இதற்கு அமைய 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்திற்கு அமைய திருத்தங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன. 1. POS (Point of Sale) இயந்திரத்திற்காக உரியதாக ஒழுங்கு விவர்குறிப்புக்கள் ஆணையாளர் நாயகத்தினால் பெயரிடப்பட வேண்டும் என்று, 2. அனைத்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிற்காக பதிவு செய்துள்ள நபர்களுக்கு ஆணையாளர் நாயகத்தினால் பணிக்கப்பட்ட திகதி தொடக்கம் 03 மாதங்களுக்குள் POS (Point of Sale) இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று,

	பதிவு செய்யப்பட்டவர்களா என்பது தொடர்பாக மற்றும் VAT வரி எல்லைக்குள் இருக்கின்றார்களா என்பது தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு மற்றும் வேறு நாடுகளில் POS இயந்திரத்தினைப் பயன்படுத்தும் பயன்படுத்தும் முறைகள் தொடர்பான கற்கைக்காக குறிப்பிட்ட காலம் கடக்கும் என்று என்பதனால் அதற்காக 3 மாத காலத்தினை வழங்குமாறு கோப்பட்டுள்ளது.	
03	<u>நிலுவை வரி</u> 2023 ஜூன் மாதம் 30 ஆம் திகதியன்று நிலுவை வரி மற்றும் தண்டம் அளவு ரூபா 943,003,334,758/- என்றும் 2022.12.31 ஆம் திகதியன்று Legacy கணனி முறைமைக்கு அமைய பெறுமதி சேர்க்கப்பட்ட நிலுவை வரி மற்றும் தண்டப் பெறுமானமான ரூபா 33,265,432,575/- இனால் ரூபா 22,184,676,544/- நிலுவை வரி மற்றும் தண்டப் பணம் அரசாங்கத்தினால் அறவிடுவதற்காக இயலுமைகள் அவதானத்திற்கு உட்பட்டுள்ளமை செயற்குழுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.	2022.12.31 ஆம் திகதிய நிலுவை வரி அறிக்கையில் (C49 அறிக்கை) Legacy கணனி முறைமைக்கு அமைய பெறுமதி சேர்க்கப்பட்ட அறவிட முடியுமான நிலுவை வரி மொத்தப் பெறுமதியான ரூபா 26,477,059,394.95 ஆகும். 2025.12.31 ஆம் திகதிய நிலுவை வரி அறிக்கையில் Legacy கணனி முறைமைக்கு அமைய பெறுமதி சேர்க்கப்பட்ட அறவிட முடியுமான நிலுவை வரியின் மொத்த பெறுமதி ரூபா 19,122,453,378.36 ஆகும். இதற்கு அமைய 7,354,606,016.59 பெறுமதி சேர்கப்படட வரி அளவு தீர்க்கப்பட்டுள்ளது. எனவே நிலுவை காணப்பட்ட பெறுமதி சேர்கப்பட்ட வரி அறவிடும் செயற்பாடுகளுக்க பாதிப்பிற்கு உட்படவில்லை என்பதுடன் காணப்படும் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தொடர்ந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதான அறிவிக்கின்றேன்.

04	**மறுக்கப்பட்ட காசோலைகள்** காசோலை ஊடாக வரிக் கொடுப்பனவின் போது காசோலை மறுக்கப்படுவதனால் வரிக் கொடுப்பனவிற்கான மாற்று முறையாக வங்கிக் கட்டளையினைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆரம்ப கணக்கு செயற்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டதுடன் 2023 ஜுன் மாதம் 30 ஆம் திகதியன்று ரூபா 210 மில்லியனுக்கு அண்மித்த பெறுமதி கொண்ட அறவிடப்பட வேண்டிய மறுக்கப்பட்ட காசோலை காணப்படுவதாக தொவிக்கப்பட்டது. அத்துடன் மறுக்கப்பட்ட காசோலையினை சமர்பிப்பவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக செயற்குழுவினால் வினவப்பட்டது. மறுக்கப்பட்ட காசோலை தொடர்பில் ஆய்வினை மேற்கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பி.க.வ. / க.வ.உ இனால் தெரிவிக்கப்பட்டது. காசோலை ஊடாக வரிக் கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஊடாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு நிதி வைப்பிலிடக் கூடியவாறு ஆரம்ப சந்தர்பத்தில் மக்கள் வங்கியிற்கு மாத்திரம் அவ்வாறு கிடைக்கும் காசோலைகள் வெளியிடப்பட்டதன் பின்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கில் வைப்பிலிடப்பட்ட போதிலும், உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இலங்கை வங்கியினால் உள்நாட்டு இறைவரித் திணைக்கள கணக்கிற்கு நிதி வைப்பிலிடப்படுவது காசோலை தீர்க்கப்பட்டதன் பின்னர் என்று பி.க.உ. / க.வ.உ. இனால் தெரிவிக்கப்பட்டது.	செயற்குழுவின் பரிந்துரைக்கு அமைய மறுக்கப்படுவதனை தடுக்கும் நோக்கில் 2024-04-04 ஆம் திகதிய 2378/33 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் காசோலை கொடுக்கள் வாங்கள் வரையறுக்கப்பட்டன. அவ்வாறு அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியினை அறிவுறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் ஏற்கனவே காசோலை மறுக்கப்படும் நிலமை வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் காசோலை மறுக்கப்படுவதற்கு அமைய கறுப்புப்பட்டியலில் உட்படுத்தும் செயற்பாடுகளும் கிரமமாக மாதாந்தம் மேற்கொள்ளப்படுவதான தயவாய் அறிவிக்கின்றேன். இதற்கு மேலதிகமாக காணப்படும் மறுக்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவர்களுக்கு பிரதேச அலுவலக மட்டத்தில் வங்கி தடைவிதிப்பு மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு பிரவேசிப்பது தொடர்பாக உரிய பிரிவிற்கு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

	அத்துடன், மறுக்கப்பட்ட 3 காசோலைகளைவிட வழங்கப்படும் வரி செலுத்துநர்களின் பெயர் கறுப்புப் பட்டியலில் உட்படுத்த திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதாகவும் அதற்கு அமைய, அவ் வரி செலுத்துநர்கள் தொடர்பாக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்படுவதனால் அவ்வாறான நபர்களுக்கு தொடர்ந்தும் காசோலை மூலம் வரிக் கொடுப்பனவிற்கு வாய்ப்பினை வழங்காதிருக்க நடவடிக்கை எடுப்பதற்கு இயலுமைகள் இருப்பதாபகவும் பி.க.உ / க.வ.உ. இனால் தெரிவிக்கப்பட்டது __பரிந்துரை__ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு காசோலை மூலம் வரிக் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது காசோலை மறுக்கப்படுவதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வாக வங்கிப் பிணையினைப் பயன்படுத்துவதற்காக காணப்படும் இயலுமைகள் தொடர்பாக மத்திய வங்கியுடன் கலந்துரையாடி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு செயற்குழுவினால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் பி.க.உ. இற்கு பரிந்துரை செய்யப்பட்டது. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் திறைசேரி பிரதி செயலாளரின் இலக்கம் MF 06/ 4/ IRD/ COPA/ 2023 மற்றும் 2024.01.08 ஆம் திகதிய கடிதம் மூலம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு காசோலை மூலம் வரி செலுத்தக் கூடாது என்று தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அச் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்படும் ஒழுங்குக் கோவை மூலம் அல்லது சட்டத்தினை திருத்துவதன் மூலம்	

	மேற்கொள்ள முடியும் என்று சட்ட அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	
05.	**வருமான நிருவாக தகவல் முகாமைத்தவ முறைமை (RAMIS) புள்ளிவிபர முறைமை** RAMIS 2.0 (version) ஏற்கனவே அமுல்படுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளதகவும் மதிப்பீட்டு ஆண்டு 2018-2019 இற்காக வருமான வரி அறிக்கை செயற்பாடுகள் இதன் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்கால மதிப்பீட்டு 3 ஆண்டுகளுக்காக முறைமையில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் 2023 டிசம்பர் மாதம் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பி.க.உ / க.வ.உ இனால் தெரிவிக்கப்பட்டது. RAMIS முறைமைக்கு 06 நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளதாகவும் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திற்கு இம் முறைமையுடன் தொடர்புபடுத்தும் போது ஏற்பட்ட ஒரு சில தொழில்நுட்ப தடைகள் காரணமாக இத் திணைக்களத்துடன் தொடர்புபட முடியாதிருப்பதாகவும் செயற்குழு மூலம் வெளிப்படுத்தப்பட்டது. கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் (ROC) முறைமையில் கம்பனியில் பதிவு செய்யும் போது அவற்றின் முகவரியினை உள்ளடக்கும் போது அதன் எழுத்துக்கள் (Characters) எண்ணிக்கையில் பிரச்சினைகள் காரணமாக RAMIS முறைமையுடன் தொடர்புபட முடியாது என்று இதன் போது தெரிவிக்கப்பட்டது. RAMIS முறைமையின் முகவரியினை உள்ளடக்குவதற்கு 40 எழுத்துக்கள் என்ற எல்லை காணப்படுவதாக இதன் போது தொவிக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS 2.0 எழுத்துக்களின் எண்ணிக்கையினை 60 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.	RAMIS 2.0 முறைமை ஏற்கனவே முழுமையாக அபிவிருத்தி செய்து நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைய மதிப்பீட்டு ஆண்டு 2024 / 2025 வரை வருமான வரி மதிப்பீட்டினை முறைமையில் உள்ளடக்க தடைகள் இல்லை. RAMIS முறைமையின் முகவரியினை உள்ளடக்குவதற்காக ஒரே வரிசையில் 60 எழுத்துக்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கம்பனிப் பதிவாளர் திணைக்களம் (ROC) முறைமையில் முகவரியினை உள்ளடக்குவதற்காக புதிய வரிசை (Additiona Field) உள்ளடக்கப்பட்டுள்ளது. கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும் அனைத்து கம்பனியிற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை கட்டாயப்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட கம்பனியில் பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு முன்னர் TIN இலக்கத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒழுங்குக் கோவை, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வெளயிடப்படவுள்ளது.

	கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் காணப்படும் இப் பிரச்சினைகள் காரணமாக RAMIS முறைமை தொடர்பில் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக்குழுவின் அறிக்கை வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அக் குழுவின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது. RAMIS முறைமை மற்றும் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்துடன் தொடர்புபடுத்தும் போது மாற்றியமைக்கப்பட வேண்டிய முறைமை எவை என்பது தொடர்பாக செயற்குழுவினால் வினவிய போது e-ROC முறைமைக்கு உரிய மாற்றங்களை மேற்கொள்ளுவது மிகுந்த இலகுவான மற்றும் பொருத்தமானது என்று உரிய தரப்பினரினால் சுட்டிக் காட்டப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்கள முறைமை மாற்றியமைக்கப்படும் பட்சத்தில் அது பல்வேறுபட்ட தாக்கம் செலுத்தும் என்பதனால் கம்பனிப் பதிவாளர் திணைக்கள அதற்கு பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்று இதன் போது யோசனை தெரிவிக்கப்பட்டது. கம்பனியின் பதிவாளர் திணைக்களத்தினால் முறைமையின் முகவரியினை உள்ளக்குவதற்காக மேலதிக துறை / வாய்ப்புக்கள் (Additional field) உள்ளடக்குமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் அதன் எழுத்துக்குளின் (Characters) எண்ணிக்கை 60 வரை அதிகரிக்குமாறு செயற்குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டது. <u>பரிந்துரை</u> உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான நிருவாக தகவல் முறைமை (RAMIS) ஊடன் தொடர்புபடுவதற்காக கம்பனிப் பதிவாாளர் திணைக்களத்தினால் தமது புள்ளிவிபர தொகுதியின் தேவைகளை திருத்தியமைத்து உரிய இணைப்பினை பூர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தேவைப்படும் காலம் தொடர்பான கால எல்லை மற்றும் அதற்கான செலவினத்தினை உள்ளக்கிய அறிக்கை 2023.12.31 ஆம் திகதியிற்கு முன்னர் செயற்குழுவிற்கு வழங்குமாறு செயற்குழுவினால் கம்பனிப்	

	பதிவாளருக்கு பரிந்துரை வழங்கப்பட்டது. கம்பனிப் பதிவாளர் திணைக்களம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமையுடன் தொடர்புபடுவதற்கு தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுமாறும் அது தொடர்பான முழுமையான அறிக்கை 2023.12.01 ஆம் திகதியிற்கு முன்னர் செயற்குழுவிற்கு வழங்குமாறும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் பி.க.உ / க.வ.உ இற்கு செயற்குழுவினால் பரிந்துரைகள் செய்யப்பட்டன. RAMIS புள்ளிவிபர முறைமை தொடர்பில் அரசாங்கத்தின் கணக்கு தொடர்பான செயற்குழுவினால் நியமிகக்ப்பபட்ட தொழில்நுட்ப குழுவின் குழு 1 இல் இப் புள்ளிவிபர முறைமையினை அமுல்படுத்துவது தொடர்பிலான பரிந்துரை அடங்கிய அறிக்கை 2023.12.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயற்குழுவிற்கு வழங்குமாறு அக் குழுவின் தலைவருக்கு செயற்குழுவினால் கட்டளையிடப்பட்டது. i. கம்பனிப் பதிவாளர் நாயகத்தின் இலக்கம் ARGC/Miscellaneous/ 2023 மற்றும் 2024.01.08 ஆம் திகதிய கடிதம் மூலம் Address line இல் எழுத்துக்களின் எண்ணிக்கை 90 வரை அதிகரிப்பதற்கு IRD இணங்காமையினால், ROC யின் Address line எழுத்துக்களின் எண்ணிக்கை 60 வரை குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ROC Address line மூன்று வரை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ii. திறைசேரி பிரதி செயலாளரின் இலக்கம் MF06/4/IRD/COPA/2023 மற்றும் 2024.01.04 ஆம் திகதிய கடிதம் மூலம் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் eROC முறைமை மற்றும் உள்நாட்டு இணைவரித்	

	திணைக்களத்தின் RAMIS முறைமை தொழில்நுட்ப ரீதியில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன், கம்பனி பதிவு செய்யப்படும் வேளையில் வரி செலுத்துனரை அடையாளம் காணும் இலக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பதாரிக்கு இயலுமைகள் காணப்படுகின்றன. இருப்பினும் உரிய முறைமைகளில் முகவரியிற்காக வழங்கப்பட்டுள்ள துறைகளில் காணப்படும் மாற்றங்களுக்கு அமைய eROC மூலம் அனுப்பப்பட்ட புள்ளிவிபரங்கள் செல்லுபடியாகாமை மற்றும் உரிய விபரக்குறிப்புகளுக்கு உட்படாமையின் அடிப்படையில் ஒரு சில கம்பனிகளுக்காக TIN இலக்கம் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் 2023.08.18 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் eROC முறைமையில் முகவரியிற்காக மேலதிக வரியினை உள்ளடக்குவதற்கும் RAMIS முறைமையில் எழுத்துக்கள் 40 தொடக்கம் 60 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் பரீசீலனை பரிசோதனைகளை மேற்கொண்டு இதனை முறைமையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இம் முறையின் கீழ் TIN இலக்கத்தினை வழங்குவது மாத்திரம் மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது அனைத்து கம்பனிகளின் பதிவுக் கோரிக்கைகாக கட்டாயப்படுத்த வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. iii. உரிய அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.	

	அத்துடன் RAMIS புள்ளிவிபர முறைமை தொடர்பில் பராமரிப்பு உடன்படிக்கை 2024.01.31 ஆம் திகதி நிறைவடைவதாகவும், அம் முறைமையின் பராமரிப்பு செயற்பாடுகளை முழுமையாக பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் வளங்கள் இல்லை என்றும் இதன் போது குறிப்பிடப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் இப் பராமரிப்பு உடன்படிக்கையினை தொடர்ந்தும் நீடிப்பதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வாறு நீடிப்பதற்கு முடியாத சந்தர்பத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக கலந்துயாடப்பட்டுவதாக பி.க.உ / க.வ.உ தெரிவித்தார்.	RAMIS முறைமையினை பராமரிப்பதற்கு, முறைமயின் ஆக்குநரான Singapore Corporation Enterprise (SCE) நிறுவனத்துடன் 2024.02.01 ஆம் திகதி தொடக்கம் 2027.01.31 வரை 03 வருடங்களுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அமைய பராமரிப்பு உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது. அப் பராமரிப்பு உடன்படிக்கைக்கு அமைய RAMIS முறைமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பொறுப்பளிப்பதற்காக யோசனை நிதி அமைச்சிற்கு 2024.11.06 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டது. மேலும், இப் பெறுப்பேற்பு திட்டத்தினை மீளாய்வு செய்து பரிந்துரை சமர்பிப்பதற்காக பணிப்பாளர் நாயகம் (தாபனம்) இன் மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நிதி அமைச்சின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய அவ் அறிக்கையின் பரிந்துரையினை அமுல்படுத்துவதற்காக 2025/09/08 ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்துள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிருத்தி அமைச்சரினால் சமர்பிக்கப்பட்ட இலக்கம் MF/088/CM/2025/221 (இணைப்பு 01) மற்றும் 2025.08.24 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பரிந்துரையினை அமுல்படுத்துவதற்காக 2025.09.08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழுங்கப்பபட்டுள்ளது. இதற்கு அமைய டிஜிடல் பொருளாதார அமைச்சின் செயலாளரின் தலைமையில், எழக் கூடிய மானிட வள எல்லைகளை புரிந்து கொண்டு உத்தேச பொறுப்பேற்பு திட்டத்தினை ஆராய்ந்து மதிப்பீடுகளுக்காக 10 அங்கத்தவர்களைக் கொண்ட குழு 2025.11.17 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. இக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை 2026.01.08 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட அமைச்சரவை பரிந்தரைகளுக்கு அமைய பொறுப்பேற்பு திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்பாட்டுப் பொறுப்புக்கள், நிதிப் பொறுப்புக்கள் தொடர்பாக டிஜிடல் பொருளாதார அமைச்சின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் மற்றும் உரிய அமைச்சின் செயலாளர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை எட்டப்பட வேண்டும். இப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் வரைவு சட்ட வெளியீட்டு செயற்பாடுகளுக்காக நிதி அமைச்சிற்கு 2026.04.27 ஆம் திகதி அனுபப்பட்டது.

		பொறுப்பேற்பினை ஆரம்பிப்பதற்கு முன்னர் RAMIS முறைமை தொடர்பாக முழுமையான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும், பொறுப்பேற்புத் திட்டம் தொடர்பாக பரிந்துரையினை பெற்றுக் கொள்வதற்காக டிஜிடல் பொருளாதார அமைச்சின் ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி செயலக அலுவலகத்தின் வருமான நிருவாக மீள் கட்டமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் / Gov Tech Sri Lanka Pvt நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நிபுணத்துவ அறிவு கொண்ட இரண்டு உத்தியோகத்தர்கள் 2026.02.26 ஆம் திகதி பெயரிடப்பட்டனர். அதற்கு அமைய அவர்களினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் SCE/NCS/ (Pvt) Ltd நிறுவனத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அவர்களினால் RAMIS முறைமை பெறுப்பேற்பு திட்டம் மற்றும் பரிந்துரை சமர்பிக்கப்படவுள்ளது.
06.	<u>கசினோ வியாபாரத்திற்காக வரி அறவிடுதல்.</u> கசினோ வியாபாரத்தினை முன்னெடுக்கும் நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதி சட்டத்திற்கு அமைய ஒரு தடவை மாத்திரம் செலுத்த வேண்டிய ரூபா 1000 மில்லியன் வரி செலுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு அமைய இலங்கையில் காணப்படும் 04 கசினோ வர்த்தக நிறுவனங்களினால் அவ் வரி நிதி செலுத்தப்படவுள்ளதாகவும் செயற்குழுவில் தெரிவிக்கப்பட்டது. இந் நிறுவனங்களினால் உரிய வரி நிதி செலுத்தப்படாமையினால் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன் வழக்குத் தீர்ப்பிற்கு அமைய அந் நிறுவனத்தினால் 7 மாதங்களுக்கு அந் நிதியினை செலுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் இரண்டு நிறுவனங்கள் மாத்திரம் அத் தீர்ப்பிற்கு அமைய அந் நிதியினை செலுத்தியதாக குறிப்பிடப்பட்டது. அத்துடன் எஞ்சிய இரண்டு நிறுவனங்கள் அவ் வழக்கு தீர்ப்பிற்கு எதிராக மேற்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கு அமைய அந் நிறுவனங்களினால் மாதாந்தம் ரூபா 15 மில்லியன் வீதம் வரிப் பணம் செலுத்தப்படுவதாகவும் தொடர்ந்தும் தெரியவந்தது.	மரீனா மற்றும் ஸ்டார் டஸ்டி கசினோ இரண்டு நிறுவனங்கினால் 2026.05.07 ஆம் திகதியளவில், கசினோ கைத்தொழில் நிலுவை வரி ரூபா 705,000,000/= வீதம் செலுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு நிறுவனத்திற்கு ரூபா 295,000,000/= வீதம் செலுத்துவதற்கு எஞ்சியிருப்பதாக தயவாய் அறிவிக்கின்றேன். அத்துடன், அந் நிறுவனங்களின் வருடாந்த வரி நிதி கொடுப்பனவு செலுத்துவதற்கு தவறவிடுதல் தொடர்பில் வழக்கு இலக்கம் CA/(Writ)/793/2024 இன் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெறுகின்றது.

	இதற்கு மேலதிகமாக அந் நிறுவனம் வருடாந்த வரி நிதி (Annual Levy) செலுத்துவதனை தவறவிட்டுள்ளமையினால் அதற்கு எதிராகவும் வழக்கு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பி.க.உ / க.வ.உ. இனால் தெரிவிக்கப்பட்டது.	
07.	<u>புதிய வரி செலுத்துநர்களை பதிவு செய்தல்.</u> வருமான வரியினை அதிகரிப்பதற்கு தேவையான வலயமைப்பினை விருத்தி செய்தவற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் அது தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பா செயற்குழுவினால் வினவப்பட்டது. 2023 ஜனவரி மாதம் தொடக்கம் 2023 ஒக்டோபர் 31 வரை புதிய வருமான வரிக் கோப்புக்கள் 198,253 திறக்கப்பட்டுள்ளதாகவும் 2024 ஜனவரி மாதம் தொடக்கம் 18 வயதினைவிட மேற்பட்டவர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பி.க.உ / க.வ.உ. தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்கள் குடிசன புள்ளவிபரவியல் திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று செயற்குழுவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டது. இலத்திரணியல் ஊடக நிறுவனங்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் மற்றும் தொலைபேசி குறுஞ் செய்தி (SMS) ஊடாக உரிய அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் பி.க.உ. / க.வ.உ தெரிவித்துள்ளார். வரி அறிவிடுவதற்காக நபர்களுக்கு TIN இலக்கம் (Taxpayer Identification Number) வழங்கி புள்ளிவிபர	2024 ஆம் ஆண்டு தொடக்கம் 2026.04.30 ஆம் திகதி வரை வரி வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் வரி வலயமைப்பினை விரிவுபடுத்தும் நோக்குடன் பொது மக்களை அறிவுறுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட முறைகளின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1. சமூக ஊடக வலயமைப்பு மற்றும் ஏனைய இலத்திரணியல் ஊடகங்கள் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் பொது மக்களை அறிவுறுத்தல். e-service இற்கு பிரவேசிப்பது தொடர்பாக தெளிவுபடுத்தல், வரியிற்காக Online பதிவு செய்தல், PIN இலக்கம் பெற்றுக் கொள்ளல், Online வரி விபரத்திரட்டுக்களை கோப்பிடுதல், RAMIS முறைமை ஊடாக வரி செலுத்துனர்களின் தகவல்களை சமகாலப்படுத்தல். • சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் Youtube அலைவரிசை ஊடாக வீடியோ பதிவேற்றம் செய்தல். • தொலைக்காட்சி நேர்காணலுக்காக மக்களை அறிவுறுத்துவதற்கு திணைக்கள உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்த நடவடிக்கை எடுத்தல். 2. வரி தொடர்பாக அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல். 2.1 பல்வேறுபட்ட அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய அவ் வளாகத்திற்கு சென்று அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல், அவ்வாறான ஒன்லைன் முறைகளின் கீழ் வரியிற்காக பதிவு செய்தல், PIN இலக்கத்தினைப் பெற்றுக் கொள்ளல், வரி

	பகுப்பாய்வுகளை மேற்கொண்டு உரிய நபர்களுக்கு வரி பொறுப்புக்கள் இருப்பின் சுய அடிப்படையில் பதிவிற்கு வாய்ப்பு வழங்குவதும், அவ்வாறு இல்லாதிருப்பின் பதிவினை கட்டாயப் படுத்துவதும் (Force Registration) மேற்கொள்ளப்படுவதாக பி.க.உ. / க.வ.உ. இனால் தெரிவிக்கப்பட்டது.	விபரத்திரட்டு கோப்பிடுவதற்காக வரி தகவல்களை சமகாலப்படுத்துவது தொடர்பாக நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களை அறிவுறுத்தல். 2.2 திணைக்களத்தின் தலையீட்டுடன் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கான அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை நடாத்துதல். • வீதி ஆய்வு (Street Survey) வேலைத்திட்டங்களை நடாத்துவதன் மூலம் பொது மக்களிடம் சென்று வரி தொடர்பில் அறிவுறுத்தல் மற்றும் புதிய கோப்புக்களை திறப்பதற்காக நடவடிக்கை எடுத்தல். • ஒன்லைன் முறைமையின் கீழ் வரியிற்காக பதிவு செய்தல், PIN இலக்கத்தினைப் பெற்றுக் கொள்ளல், வரி விபரத்திரட்டுக்களை கோப்பிடுதல், வரி செலுத்துநர்களின் தகவல்களை சமகாலப்படுத்துவது தொடர்பாக நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களை திணைக்கள வளாகத்திற்கு அழைத்து அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். • வருமான விபரத்திரட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ள திகதிக்கு அண்மித்த காலத்திற்குள் நடமாடும் சேவைகளை நடாத்துவதன் மூலம் அரச நிறுவனங்களுக்கு சென்று ஒன்லைன் முறை ஊடாக வரி விபரத்திரட்டுக்களை வழங்குவதற்கு துணைச் சேவையினை வழங்குதல் மற்றும் அதற்கு இணைவாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் வரி விபரத்திரட்டுக்களை ஒன்லைன் முறைக்கு வழங்குவதற்காக வரி செலுத்துநர்களுக்கு உதவிச் சேவைகள் மற்றும் ஏனைய ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்ளல். 2023 நவம்பர் மாதம் தொடக்கம் 2026 ஏப்ரல் TIN இலக்கம் (Taxpayer Identification Number) 11,594,488 வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023 நவம்பர் மாதம் தொடக்கம் 2026 ஏப்ரல் மாதம் வரை கீழ் குறிப்பிடப்பட்ட வரி வகைகளுக்காக நபர்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு பதிவு செய்துள்ளனர்.

		CIT - 54,356 IIT - 813,777 PIT - 3,680 PAYE - 9,387 WHT - 3,410 VAT - 22,227 VAT ON FS - 95 SD - 1,542 CGT - 9,288 SSCL - 9,358

(நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சிற்கு உரியதாக 2021 மற்றும் 2022 நிதி ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை, இவ் அமைச்சினால் தற்போதைய செயற்சாதனைகள் மற்றும் இலங்கை சுங்கத்தின் 2023 நவம்பர் நவம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2023 நவம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற மற்றும் கலால் வரி திணைக்களத்தின் 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் தற்போதைய நிலமைகள்) ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட திகதி - 2024 ஜனவரி 24		
01.	<u>அரச வருமானத்தினை விருத்தி செய்வதற்காக நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் தலையீடு</u> அரச வருமானத்தினை விருத்தி செய்வதற்காக நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சிற்கு உண்மையான தேவை காணபடுகின்றதா என்பது தொடர்பாக செயற்குழுவினால் வினவப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வரி வருமானத்தினை உரியவாறு சேர்ப்பதற்கு முடியாமைக்கு கணக்காய்வு கம்பனிகளின் செயற்பாடுகள் காரணம் என்று மேற்பார்வை செய்யப்பட்ட செயற்குழு கணக்காய்வுக் கம்பனி உரியவாறு மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் வருமானத்தினை விருத்தி செய்யும் நோக்கிற்காக உள்நாட்டு இறைவரி சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டது. பொருளாதார நெருக்கடியினை எதிர்கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டிற்காக நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு உரியவாறு பொருளாதார திட்டத்திற்கு அமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சுட்டிக் காட்டிய செயற்குழு அமைச்சின் பின்னடைவுகள் மேற்பார்வை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.	செயற்பாட்டுத் திட்டம் (Action Plan) இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

	<u>பரிந்துரை</u> இலங்கை சுங்க, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் கணக்கு செயற்குழு, அரச நிதி தொடர்பான செயற்குழு, திட்டமிடல் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான செயற்குழு, தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான துறைசார் மேற்பார்வை செயற்குழு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை தீர்ப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வை செயற்குழுவினால் கடந்த ஒரு வருட காலம் (2023.01.01 – 2024.01.26) இற்குள் வழங்கப்பட்ட கட்டளை / பரிந்துரை / யோசனைகளை உள்ளடக்கிய கலந்துரையாடல் குறிப்பினை ஆராய்நது மேற்கூறப்பட்ட மூன்று அரச நிறுவனங்களின் வருமானத்தினை விருத்தி செய்வதற்காக தேவையான யோசனைகள் மற்றும் அதனை அமுல்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டம் 2024.02.26 ஆம் திகதியிற்கு முன்னர் செயற்குழுவிற்கு வழங்குமாறும், மற்றும் இது தொடர்பில் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் இணைப்பினை மிகுந்த வினைத்திறனுடன் மேற்கொள்ளுமாறு செயற்குழுவினால் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.உ. / க.வ.உ இற்கு பரிந்துரை செய்யப்பட்டது. நிதி, பொருளாதார ஸ்திரத்திரத் தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளரின் இலக்கம் MF6/ 4/ COPA/ General/ 2023 கொண்ட 2024.03.05 திகதிய கடிதத்திறன் மூலம் மது வரி திணைக்களத்திற்கு உரியதாக வருமானத்தினை விருத்தி	

	செய்வதற்கான யோசனைகள் மற்றும் செயற்பாட்டுத் திட்டமும், இலங்கை சுங்க, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரியதாக வருமானத்தினை விருத்தி செய்வதற்காக தேவையான யோசனைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன.	
02.	<u>நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுக்கு இடையிலான இணைப்புக்களின் பலவீனங்கள்</u> கசினோ மேற்பார்வையாளரை நியமிக்கும் தேவை அரச நிதி தொடர்பான செயற்குழுவினால் சுட்டிக் காட்டப்பட்டு இருந்ததுடன் அது 2023.09.30 ஆம் திகதியளவில் முடிவுறுத்தப்படுவதாக நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சினால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இது வரை அமுல்படுத்தப்படாமை தொடர்பாக அரச நிதி தொடர்பான செயற்குழுவின் தலைவரினால் செயற்குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கான காரணமாக அமைந்திருப்பது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சிற்கு இடையில் உரிய இணைப்புக்கள் இன்மை என்று செயற்குழுவினால் மேற்பார்வைக்கு உட்கபடுத்தப்பட்டது. அத்துடன், வெளிநாட்டுக் கம்பனியினால் மென்பொருள் முறைமை இலங்கையில் சந்தைப்படுத்தும் சந்தர்பத்தில் அக் கம்பனியிற்காக பொறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) அறவிடுவதற்கு தவறியிருப்பது நிதி பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இடையில் காணப்படும் இணைப்புக்களின்	நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுக்கு இடையிலான இணைப்பின் பலவீனங்களை மேற்பார்வை செய்வதற்காக அரச வருமான நிருவாக மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் பிரிவு ஜனாதிபதி செயலக அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

	பலவீனம் காரணங்கள் என்று செயற்குழுவினால் சுட்டின் காட்டப்பட்டது.	
04.	**<u>குறைந்தபட்ச மாற்று வரிக் கொள்கைகள்</u>** ஒருசில நாடுகளைத் தவிர உலகின் அனைத்து நாடுகளிலும் அறவிடப்படும் குறைந்தபட்ச வரிக் கொள்கை (minimum alternate tax) இலங்கையினால் அமுல்படுத்தப்படுவதில்லை என்பதனால் அரசாங்கத்திற்கு பாரிய வரி நிதியினை இலக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக செயற்குழுவினால் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களினால் கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுக்காமை தொடர்பில் தமது அதிருப்தியினை தெரிவித்தனர்.	2025 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ள மாற்று வரிக் கொள்கை (minimum alternate tax) அமுல்படுத்துவதற்கு தேவையான சட்டரீதியின் பின்னனி இது வரையில் அங்கீகரிக்கப்படாமையயினால் இத் திணைக்களத்தின் உள்நாட்டு இறைவரி சட்டத்தின் முதலாவது அட்டவணைக்கு அமைய கம்பனியிற்காக தற்போது காணப்படும் வரி வீதம் உயர்ந்த பட்ச பெறுமதி 30% என்பதுடன் அதன் குறைந்தபட்ச வீதம் 14% ஆகும். 2025/2026 மதிப்பீட்டு ஆண்டு வரை வெளிநாட்டு வருமானம், 2025/2026 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் 15% வரி வீதத்திற்கு உட்படுத்துவதற்கு உரியதான வரிக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. OECD pillar two இன் கீழ் உத்தேச குறைந்தபட்ச மாற்று கொள்கை (Global Minimum Tax) அமுல்படுத்துவதற்கு தேவையான சட்டப் பின்னனி வகுக்கப்படாத பின்னயில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உரிய வரியினை சேகரிப்பதற்கு இயலுமைகள் இல்லை என்று அறிவிக்கின்றேன்.

05.	<u>தற்காலிகமாக பெறுமத சேர்க்கப்பட்ட வரி (VAT) பதிவு செய்தல்.</u> தற்காலிக வட் (VAT) பதிவின் மூலம் அரசாங்கத்திற்கு பாரிய அளவு வரி வருமானத்தினை இழக்க நேரிட்டுள்ளதாக மேற்பார்வை செய்த செயற்குழு நிரந்தர VAT பதிவிற்கு உரிமையற்ற நிறுவனங்களுக்கு தற்காலிகமாக VAT இலக்கம் வழங்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. <u>பரிந்துரை</u> இது தொடர்பாக ஆராய்ந்து பொருத்தமான செயற்பாடுகள் குறித்து பரிந்துரை செய்வதற்காக குழுவினை நியமிக்குமாறும், தற்காலிக VAT இலக்க பதிவினை இரத்து செய்வதற்கு காணப்படும் இயலுமைகளை கண்டறிந்து அதனை இடைநிறுத்துவதற்காக இயலுமைகள் காணப்படாத பட்சத்தில் அது தொடர்பான காரணத்தினை உள்ளடக்கிய அறிக்கை 2024.02.22 ஆம் திகதியற்கு முன்னர் செயற்குழுவிற்கு சமர்பிக்குமாறும் செயற்குழுவினால் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை றம்றுமு் தேசிய கொள்கை அமைச்சின் பி.க.உ. இற்கு பரிந்துரை செய்யப்பட்டது. நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளரின் இலக்கம் MF5/ PA/ 04/ 2024/ Tax கொண்ட 2024.03.11 திகதிய கடிதம் மூலம் தற்காலிக வட் பதிவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் கணிசமான வருமானத்தினை இழப்பது தொடர்பில் ஆராய்ந்து பொருத்தமான செயற்பாடுகளை பரிந்துரை செய்பவதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.	2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட (திருத்தப்பட்ட) வரி சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அத் திருத்த சட்டம் அமுல்படுத்தப்படும் தினம் தொடக்கம் எதிர்வரும் காலங்களில் வர்த்தகமய பணிகளுக்காக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்காக மேற்கூறப்பட்ட சட்டத்தின் கீழ் நிரந்தர பதவினைப் பெற்றுக் கொள்வத கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைய தனியார் இறக்குமதி பணிகளுக்காக மாத்திரம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிற்காக தற்காலிக பதிவுகள் வழங்கப்படுகன்றன.

06.	**<u>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சயுஆஜஐளு புள்ளிவிபர முறைமை (Revenue Administration Management Information System)</u>** வரி தொடர்பிலான கட்டளைச் சட்டங்களின் கட்டமைக்கப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்காக மாற்றங்களை மேற்கொள்ளும் கோரிக்கை (Change Request) மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வரி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் புள்ளிவிபர முறைமையில் உரியதாக்கிக் கொள்ள முடியும் என்று இதன் போது பி.க.உ. / க.வ.உ. இனால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் RAMIS மென்பொருளின் பிரச்சினைக்குரிய நிலமைகளை விட தொடர்புசாதான பின்னரடைவுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்து. அத்துடன், இப் புள்ளவிபர முறைமையினை அமுல்படுத்துவதற்கு உரியதாக உத்தியோகத்தர்களினால் காண்பிக்கப்பட்ட சோம்பல் மற்றும் 4 பில்லியன் ரூபாவினால் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட RAMIS புள்ளிவிபர முறைமைகக்காக ஏற்கனவே ரூபா 16 பில்லியனுக்கு அண்மித்த அளவு நிதி செலவிடப்பட்டிருந்த போதிலும், இது வரையில் அதனை உரியவாறு அமுல்படுத்த முடியாமை தொடர்பாகவும் அதே போன்று இப் புள்ளவிபர முறைமையினை நிலைப்படுத்துவதற்கான உடன்படிக்கை கணக்காய்வாளருக்கு அல்லது பரிசோதனை செய்து பார்க்கும் பிரவேசங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான செயற்குழு தமது அதிருப்பதியினை வெளியிட்டது. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட நிதி, பொருளாதார ஸ்திரத்ததன்மை	இரு இராச்சியங்களுக:கு இடையில் ஏற்படுத்திக் கெள்ளப்படும் உடன்படிக்கை நிபந்தனைக்கு அமைமய வேறு மூன்றாவது தரப்பினருடன் RAMIS கணனி முறைமைக்கு உரிய ஆவணங்கள் அல்லது தகவல்களைப் பறிமாறிக் கொள்வதற்காக சிங்கப்பூர் அரசாங்கம் சார்பில் உடன்படிக்கை கைச்சாத்திட்பட்ட Singapore Corporation Enterprises (SCE) நிறுவனத்தின் எழுத்துமூல அனுமதி கடைக்கவில்லை என்பதனால் உரிய உடன்படிக்கையின் பிரதி கணக்காய்வாளருக்கு வழங்க முடியதுள்ளது. அவ்வாறு வழங்கும் போது உடன்படிக்கையின் நிபந்தனைகள் மீறக்கூடியதாக அமைவதுடன் அது தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சிங்கப்பூர் கம்பனியினால் கம்பனியினால் எதிர்கால சட்ட நடவடிக்கைகயை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாக சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தரினால் உரிய விடயங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தரினால் COPA குழு முன்னிலையில் விடயங்கள் தொடாபாக தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

	மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய RAMIS புள்ளிவிபர முறைமையில் குறைபாடுகளை அடையாளம் காண்பதற்கு மற்றும் அதற்கான யோசனைகளை சமர்பிப்பதற்காக பல்வேறுபட்ட மட்டங்களில் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் யோசனைத் திட்டம் சமர்பிக்கப்பட்டதன் பின்னர் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். **பரிந்துரை** RAMIS புள்ளவிபர முறைமை தொடர்பில் 2023.01.24 ஆதம் அரச கணக்கு தொடர்பான செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு 1 இன் மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் அடங்கும் பரிந்துரையினை அமுல்படுத்துவது தொடர்பில் கருத்திற் கொள்வதற்காக இக் குழு மீண்டும் அழைக்கப்பட்டு தேவையான விடயங்களை கலந்துரையாடி அதன் முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கை 2024.02.22 இற்கு முன்னர் செயற்குழுவிற்கு வழங்குமாறும் : மற்றும் RAMIS புள்ளிவிபர முறைமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் (IMF) இனால் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரதிரயை செயற்குழுவிற்கு வழங்குமாறும், செயற்குழுவினால் நிதி, பொருளாதார ஸ்திரத்ததன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் பி.க.உ. / க.வ.உ இற்கு பரிந்துரை செய்யப்பட்டது. நிதி, பொருளாதார ஸ்திரத்ததன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளரின் இலக்கம்	

	MF06/04/COPA General 2023 கொண்ட 2024.05.08 திகதிய கடிதம் மூலம் RAMIS புள்ளிவிபர முறைமை தொடர்பில் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தினால் சமர்பிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு 1 அறிக்கையில் அடங்கும் செயற்பாட்டு வகைகளுக்கு உரியதான முன்னேற்றங்கள் மற்றும் காலப் பகுதியும் நிதி, பொருளாதார ஸ்திரத்ததன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளரின் இலக்கம் MF6/4/COPA/ General/2023 கொண்ட 2024.03.05 திகதிய கடிதம் மூலம் RAMIS புள்ளிவிபர முறைமை தொட்பில் சர்வதேச நாணய நிதியம் (IMF) இனால் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரதி சமர்பிக்கப்பட்டுள்ளது.	
07.	<u>வரி நிருவாகத்தினை முறைப்படுத்தல்</u> வரி நிருவாகத்தினை பயன்மிக்கதாக மேற்கொள்வதற்காக பொருளாதர நெருக்கடியிற்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று செயற்குழுவினால் வலியுறுத்தப்பட்டது. அதற்காக இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் மது வரித்திணைக்களத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்காக தனியான அலகு நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் நிருவாகத்தின் கீழ் தாபிப்பதற்கும் செயற்குழுவினால் யோசனை தெரிவிக்கப்பட்டது.	நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுக்கு இடையிலான இணைப்பின் பலவீனங்களை மேற்பார்வை செய்வதற்காக அரச வருமான நிருவாக மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் பிரிவு ஜனாதிபதி செயலக அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 487 இற்காக நிலையான கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்கு செயற்குழுவினால் சமா்பிக்கப்படும் அறிக்கைகள் தொடா்பில் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் மேற்பார்வை மற்றும் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடா்பிலான தகவல்கள் மேற்கூறப்பட்டவாறு தயவாய் சமா்பிக்கின்றேன்.

ஆணையாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.

Custom

<u>மாதிரிப் படிவம் (இல 01)</u>

<u>பாராளுமன்ற தொடர் இல 487</u>
இலங்கை சுங்கத் திணைக்களம்

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01	இலங்கையில் காணப்படுகின்ற முறைசாரா வர்த்தகம் (informal trading) ஆரம்ப காலங்களில் இறக்குமதிகளின் 10% சதவீதமாக காணப்பட்ட போதிலும், தற்போது 40% சதவீதத்தை அடைந்தமையின் காரணமாக பாரிய அளவு சுங்க வரி வருமானம் இழக்கப்படுகின்றது என்பது.	எனது இலக்கம் மற்றும் 2023.12.19 ஆம் திகதிய SLC/ESD/01/COPA/2023 எனும் இலக்கத்தை கொண்ட கடிதத்தின் மூலம் தொடர்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (இணைப்பு 01).
02	முதலீட்டுச் சபையின் வரிச்சலுகைகளை பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகளை ஏற்றுமதியின் மூலம் மீண்டும் இலங்கைக்கு வர்த்தக ரீதியான சாதகம் ஏற்படுகின்றதா என்பதை பின்னூட்டம் செய்தல்	எனது இலக்கம் மற்றும் 2023.12.19 ஆம் திகதிய SLC/ESD/01/COPA/2023 எனும் இலக்கத்தை கொண்ட கடிதத்தின் மூலம் தொடர்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய செயல்முறையானது இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்டு வருகின்ற தொகுதியின் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப் படுகின்ற அதேவேளையில், அதற்கு தேவையான ஏற்றுமதி தரவுகள் இலங்கை மத்திய வங்கிக்கு ASYCUDA தொகுதியின் மூலம் வழங்குவது மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.
03	இலங்கை சுங்கத்தில் மேம்படுத்தப்பட்ட உள்ளக மென்பொருளையும் (ASYCUDA) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ரமிஸ் (RAMIS) தொகுதியையும் கூட்டிணைத்தல்	அ) ஆசிகுடா தொகுதியில்)ASYCUDA) மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் 1. ஆரம்பத்தில் சம்பந்தப்பட்டிருந்த 14 நிறுவனங்களுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கைத் தர நிர்ணயப் பணியகம் உள்ளிட்ட 05 நிறுவனங்களை உள்ளடக்கி, 19 மொத்த நிறுவனங்கள் வரை விரிவாக்கப்பட்டது. 2. 'Track My CusDec' மற்றும் 'Track My Vehicle' ஆகிய இறக்குமதியாளர்கள்/ ஏற்றுமதியாளர்களின் சுங்க அனுமதி செயல்முறையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் விவரங்களைப் பெற்றுக்

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
		கொள்ளவும் பொது மக்களுக்கு வழங்கப்படும் மென்பொருள் கருவிகளான சேர்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன. 3. காகிதமில்லா செயல்முறையை)Paperless Process) நோக்கிய அடுத்தகட்ட நடவடிக்கையாக, சுங்க அனுமதி வழங்கும் செயல்முறையில் எண்ணிமக் கையொப்பம்)Digital Signature) மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணக் குறிப்பு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 5. வெளிநாட்டு பணம் அனுப்பும் நிர்வாக மென்பொருள் தொகுதி)Remittance Management Module(ASICUDA அமைப்பில் சேர்க்கப்பட்டது. ஆ (18 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு இறைவரித திணைக்களத்திற்கு ASICUDA அமைப்பிலிருந்து வரும் தரவுகள் அனுப்பப்பட்டு வருகின்ற அதே வேளையில், உள்நாட்டு இறைவரித திணைக்களத்தின் RAMIS அமைப்புக்கு அதன் தொடக்கத்திலிருந்தே எந்தவித இடையூறும் இன்றித் ASICUDA தரவுகள் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.
04	2021 ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதியன்று இடம்பெற்ற அரச கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் **கட்டளை இலக்கம்.01** கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி கருத்திட்டத்தின் பொருட்டு ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள உதவியின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரியினால் அந்த கருத்திட்டத்திற்கு தேவையான GI குழாய்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு வரும் பணியை ஒப்படைத்த நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு	எனது இலக்கம் ESD/04/2021/06 மற்றும் 2023.06.01 எனும் திகதியிட்டு பூர்வாங்க விசாரணைக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கை, சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	சபையினால் அதற்காக M/S Access International (pvt) Ltd நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் Access நிறுவனத்தினால் ஐ.அ.டொலர் 5,139,621/- என கிடங்கில் வைக்கப்பட்டிருந்த பண்டங்களை கிடங்கிலிருந்து விடுவிக்கும் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விலைப் பட்டியலை பயன்படுத்தி ஐ.அ.டொலர் 6,350,364/- என பெருமதியை காட்டி, போலியான தகவல்களை கொண்ட இறக்குமதிப் பதிவுகளை சமர்ப்பித்து ஐ.அ.டொலர் 1,210,743/- பெருமதியை M/S Access நிறுவனத்திற்கு கூடுதலாக பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி யிருந்தமை. மேலும் முதலாவது சந்தர்ப்பத்தில் கிடங்கிட்டு பண்டங்களை பொறுப்பேற்கும் போது செலுத்த வேண்டிய வரித்தொகை ரூபா 263,301,203/- ஆக இருந்தபோதிலும், இரண்டாவது சந்தர்ப்பத்தில் வரித்தொகை ரூபா 325,800,859/- எனக் காட்டப்பட்டிருந்த படியினால் இலங்கை அரசாங்கத்தினால் ரூபா 62,499,656/- தொகை மேல் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை. அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற இந்த விதமான கருத்திட்டங்களில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடன் தொகை மற்றும் வட்டி தொகை என்பவற்றை செலுத்த வேண்டி ஏற்படுகின்றபடியினால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு கணக்கீட்டு உத்தியோகத்திற்கு 2021 ஏப்ரல் 06 ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டத்தில் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.	

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
05	**கட்டளை இலக்கம்** 02 நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு தேவையான நிலக்கரி வழங்கலை மேற்கொள்வதற்கு அரசாங்க கம்பனியான Lanka Coal company (pvt) Ltd நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டில் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்ட 66 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட நிலக்கரிகளின் CIF பெறுமதி பற்றிய சரியான தகவல்களை வெளிப்படுத்தாததை அடிப்படையாகக் கொண்டு குறைவாக அறவிடப்பட்டிருந்த ரூபா 187 மில்லியனுக்கு கிட்டிய பெருமதி சேர் வரியை (VAT) மீண்டும் அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட சுங்க விசாரணைக்கு அமைவாக, குறைவாக கணக்கிடப்பட்ட பெறுமதி சேர் வரியை மேலதிக வரியாக அறவிடப்படாமல் ரூபா 205 மில்லியன் தண்டப்பணம் ஒன்றை விதித்து அதில் 70% சதவீதத்தை அலுவலர்களின் வெகுமதி மற்றும் நலன்புரி ஆகியவற்றின் பொருட்டு ஒதுக்கப்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு வரி வருமானம் ரூபா 125.5 மில்லியன் இழக்கப்பட்டமை. முன்னைய கணக்கு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பிரச்சனை பற்றிய விசாரணைக்காக நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு அதன் விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்து தொடர்புடைய அறிக்கையை அடுத்த 2 மாதங்களுக்குள் செயற்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு 2021.04.06 ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டத்தில் பி.க.உ./உ .உ ஆகியோருக்கு குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது.	குழுவின் பரிந்துரை வழங்கப்படவில்லை.

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
06	**கட்டளை இலக்கம் 03** இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 11,498 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 36 பளுதூக்கி இயந்திரங்கள் தொடர்பான சுங்கப் பதிவுகளை சமர்ப்பிக்காததை அடிப்படையாகக் கொண்டு, சுங்க விசாரணை ஒன்றை ஆரம்பித்து ரூபா 1,580 மில்லியன் தொகையை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு தண்டனையாக விதித்து அதில் 50% சதவீதத்தை அதாவது ரூபா 790 மில்லியன்களை வெகுமதியாக பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கப்பட்டிருந்தது மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை கோருவதற்கு 2021.04.06 ஆம் திகதியன்று முன்னைய அரசாங்கத்தின் கணக்குகள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. முன்னைய அரசாங்கத்தின் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டங்களில் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை பற்றி குழுவுக்கு அறிக்கை சமர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்திற்கு/ கணக்கீட்டு உத்தியோகத்திற்கு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2021.07.24 ஆம் திகதியன்று சுங்க பணிப்பாளர் நாயகம் அவர்களினால் மூவரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த அதேவேளையில் இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் சென்றிருந்த போதிலும் இது	குழுவின் பரிந்துரை வழங்கப்படவில்லை.

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	சம்பந்தமான இறுதி அறிக்கை வெளியிடப் பட்டிருக்கவில்லை.	
07	சுங்கக் கட்டளைச் சட்ட திருத்தம்	எனது இலக்கம் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சுங்கக் கட்டளை சட்டத்தின் 47 மற்றும் 57 ஆகியவற்றுடன் 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தை கொண்ட அரசாங்க வருமானத்தை பாதுகாக்கும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்துவது பற்றிய தற்போதைய நிலையை உள்ளடக்கிய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. தற்போது தொடர்புடைய நடவடிக்கை ஜனாதிபதி செயலகத்தின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள சுங்க கட்டளைச் சட்ட மீளாய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளையில் அந்தக் குழுவின் இறுதியான பரிந்துரைகளைக் கொண்ட முதலாவது வரைவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.
08	2021 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 2432 உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள், வேதனங்கள், மேலதிக நேரம், விடுமுறை நாட்களுக்கான சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் என்ற வகையில் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்தில் இருந்து ரூபா 1,839,078,959 தொகையும் சுங்கத்தின் மேலதிக நேர கப்பல் சரக்கை பரிசீலனை செய்வதற்கான கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 1,086,992,639 தொகையும் என்ற வகையில் மொத்தமாக ரூபா 2,926,071,598 செலுத்தப்பட்டிருந்த அதேவேளையில் மேற்சொன்ன செலவினங்கள் சம்பந்தமாக உறுதிப்படுத்தும் சாட்சியான சேவைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் விரல் அடையாள அறிக்கை கணக்காய்வுக்கு	சுங்கத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் கடமையின் தன்மைக்கு அமைவாக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவதில் நடைமுறை பிரச்சனைகள் காணப்படுகின்ற படியினால் வருகை மற்றும் வெளியேறுதல் என்பவற்றை பதிவு செய்வதற்காக வருகை இடாப்பு பயன்படுத்தப்படுகிறது. எனது இலக்கம் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2024.01.01 ஆம் திகதியிலிருந்து விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவதாக குறிப்பிடப்பட்ட போதிலும், சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்க ஒன்றியத்தினால் 2024.02.15 ஆம் திகதியன்று அவர்களின் தொழில் பிரச்சனை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு, சுங்கத் திணைக்களத்திற்கு வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை பதிவு செய்வதற்கு

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை என்பது	விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது குறித்து தொடர்ந்தும் காணப்படுகின்ற பிரச்சனைகள் சம்பந்தமாக கலந்துரையாடி பொருத்தமான நடைமுறை தீர்வு குறித்து தீர்மானித்தல் வேண்டும் என நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் இலக்கம் MFI/02/CUS/Sp.Ma மற்றும் 2024.02.16 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது அதனால், விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது பற்றி கலந்துரையாடி வழங்கக்கூடிய நடைமுறை தீர்வு பற்றி தீர்மானிப்பதற்காக மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில் தொழிற்சங்க பிரதிநிதிகள் மூவரையும் உள்ளடக்கக்கூடிய விதமாக 7 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள அதே வேளையில், அதன் மூலம் முன்மொழிபடுகின்ற பொருத்தமான நடைமுறைத் தீர்வின் ஊடாக எடுக்கப்படுகின்ற எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுகின்ற முறைமைகள் ஊடாக எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
09	இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற கொள்கலன்களுக்கு ஏற்புடையதான சுங்கத்தின் பிழைகளை அடையாளம் காணும் பொருட்டு ஐ.அ.டொலர் 21,590,000 பெருமதியான 4 வருடி இயந்திரங்களை (Scanners) இலங்கை அரசாங்கம் முழுமையான செலவினை மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டில் நிறுவி சுங்கத் திணைக்களத்திற்கு உரிமை மாற்றப்பட்டிருந்தது. இதன் போது அன்னிய செலாவணி நெருக்கடியை கவனத்தில் கொள்ளாமல் தொகையை ஐ.அ.டொலர் 21,590,000 தொகையை 180 நாட்களில் செலுத்தி வருடி இயந்திரத்தை	எனது இலக்கம் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 ஆம் திகதிய கடிதத்தின் இணைப்பு 03 இன் இன் மூலன் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் முன்மொழிவுகள் உள்ளடங்கிய அறிக்கை அனுப்பப்பட்டுள்ள அதேவேளையில் தற்போதைய நிலை இணைப்பு 02 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது சுங்கத்தின் தடைநீக்க செயல்முறைக்காக முழுமையான கதிர்வீச்சு வருடி ஒன்றை இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்தாத படியினால் வெளிப்படுத்தப்பட்ட பண்டங்களுக்கிடையில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை அடையாளம் காணுதல், போலியான பண்டங்களை வெளிப்படுத்தும் எண்ணிக்கையை குறைத்தல், தடை செய்யப்பட்ட மற்றும் சட்டவிரோதமான பொருட்களை இறக்குமதி செய்வதனை குறைத்தல் ஆகிய எதிர்பார்க்கப்படும் திட்டத்தை அடைந்து கொள்ள தவறியமை	
10	விசாரணைகளின் பின்னர் சுங்கத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப் பட்ட, அரசுடமையாக்கப்பட்ட மற்றும் ஏனைய ஒழுங்குமுறை நிறுவனங்களினால் சுங்கத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பல வாகனங்கள் மற்றும் கொள்கலன்கள் சங்கத் திணைக்களத்தின் பல்வேறு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதே வேளையில் 2023 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 14 இடங்களில் 668 வாகனங்களும் 736 கொள்கலன்களும் காணப்பட்டன. அவற்றில் ஏல விற்பனை அல்லது அப்புறப்படுத்தல் செய்யும் வரை சுங்கத்தின் கண்காணிப்பில் வைத்துக் கொள்வதற்காக தனியார் நிறுவனத்திடம் இருந்து வாடகைக்கு பெற்றுக்	குழுவினால் செய்யப்பட்ட முன்மொழிவுக்கு அமைவாக அடையாளம் காணப்பட்ட 20 வாகனங்களை தொழில்நுட்ப கற்கை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ஏற்கனவே 13 வாகனங்கள் அகற்றுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	கொள்ளப்பட்ட நிலங்களில் (SOLT YARD) 419 வாகனங்களும் 92 கொல்கனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதேவேளையில் அவற்றில் 261 வாகனங்களும் 86 கொள்கலன்களும் 05 வருடங்களுக்கும் மேலாக அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. அதில் 13 வாகனங்களுக்குரிய விசாரணை கோப்புகள் காணாமல் போயுள்ளது. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை மாத்திரம் சுங்கத் திணைக்களம் அந்த தனியார் நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தத்தை செய்திருந்த அதேவேளையில், அதன் பின்னர் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 05 சந்தர்பங்களில் காலத்தை நீடித்து நிலத்தை பயன்படுத்தியிருந்தது. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஜனவரி மாதம் வரை தொடர்புடைய தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த மொத்த வாடகை தொகை ரூபா 77,485,548 ஆக காணப்பட்ட அதேவேளையில், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து மீண்டும் மாதாந்தம் ரூபா 4,650,000 வாடகை தொகைக்கு அந்த நிறுவனத்துடன் சுங்கத் திணைக்களம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. என்பது	
11	2000 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட ஒரு தொகை சிகரெட் தொடர்பான விசாரணையின் பின்னர் அவற்றை மீண்டும் கப்பலேற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு முரணாக ஏலத்தில் ரூபா 5.9 மில்லியன் தொகைக்கு விற்பனை செய்ததன் காரணமாக சிகரெட் கப்பலேற்றப்பட்ட வெளிநாட்டு தனியார் நிறுவனத்தினால் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட	எனது இலக்கம் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 ஆம் திகதிய கடிதத்தின் இணைப்பு 04 இன் மூலம் இது சம்பந்தமான சட்ட ரீதியான பணி தொடர்பான முழுமையான அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. நி.ஒ.வி. 104 இன் பிரகாரம் பரிசீலனை ஒன்றை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சிடம் கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இலங்கை சுங்கத் திணைக்களம் மாவட்ட நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் அனுப்பிய போதிலும் கிடைக்கப்பெற்ற தீர்ப்புகள் அனைத்திலும் குற்றவாளியாக ஆகியிருந்தது. அதற்கு அமைவாக இலங்கை சங்கத் திணைக்களத்திற்கு இந்த பிழையான தீர்மானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டி ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 69.4 மில்லியனாக காணப்பட்டது. இந்த விசாரணை தொடர்பான கோப்பும் காணாமல் போயிருந்த அதேவேளையில் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களுக்கும் மேற்குறிப்பிட்ட பிழையான தீர்மானத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களுக்கும் எதிராக நி.ஒ.வி 102 முதல் 110 வரையான வற்றியின் பிரகாரம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது.	
12	பிணைக்கப்பட்ட கிடங்குகள் (Manufacture in Bond-MIB) வசதிகளை பெற்றுக் கொண்ட ஏதேனும் கைத்தொழிலுக்கு ஏற்புடையதான பண்டங்களை உள்நாட்டு சந்தைக்கு விடுவிக்கும்போது இறக்குமதி எனக் கருதி தீர்வை வரி கணக்கிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான 2 கம்பெனிகள் இலக்கம் 1448/1 மற்றும் 2006 ஜூன் 05 எனும் திகதியிட்டு கைத்தொழில் விடயப் பொறுப்பு அமைச்சரினால் வெளியிடப்பட்ட "உள்நாட்டில் நூற்றுக்கு 30 சதவீதத்திற்கு குறையாத பெருமதியை கொண்ட உதிரிப்பாகங்களை பயன்படுத்தி	பிணைக்கப்பட்ட குதங்களுக்குள் பொருத்தப் படுகின்ற வாகனங்களை சுங்கத்தின் மூலம் தடைநீக்கம் செய்யும் போது இறக்குமதிகளுக்கு உரித்தான முழுமையான உற்பத்தி வரியை அறவிட வேண்டியிருந்த போதிலும், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டில் 20% சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியை சேர்த்து பொருத்தப்படுகின்ற வாகனங்களுக்காக உற்பத்தி வரியிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் அறவிடுவதற்காக இலக்கம் 2418/43 மற்றும் 2025.01.10 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை இலக்கம் II இன் உப

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
	பொருத்தப்பட்ட வாகனங்களுக்காக வழங்கப்படுகின்ற நூற்றுக்கு 70 சதவீத வரிசலுகையைப்" பெற்றுக்கொண்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 7,191,949,084 உற்பத்தி வரி கொடுப்பனவை புறக்கணித்துள்ளமை.	இலக்கம் 02 இன் கீழ் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி அதன் அட்டவணை III மூலம் காட்டப்படுகின்ற அமைவுருவுக்கு பயன்படுத்துவதற்கு ஒழுங்குவிதியொன்று விதிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் ஏற்பாடுகள், சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் உள்நாட்டில் பொருத்தப்படுகின்ற வாகனங்களுக்கான உற்பத்தி வரியை அறவிடுவது சம்பந்தமாக வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக காணப்படுகின்ற சட்ட ரீதியான நிலைமைகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை 2019.09.06 ஆம் திகதிய கடிதத்தின் மூலமும் 2024.05.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலமும் கோரப்பட்ட பின்னர் தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு 70% சதவீத உற்பத்தி வரிச் சலுகையை வழங்குவது தொடர்பான நடைமுறை பிரச்சனைகள் சம்பந்தமாக தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும் என சட்டமா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தொடர்புடைய நடைமுறை நிலைமையை அறிக்கையிட்டு நிதி அமைச்சின் செயலாளருக்கு 2026.01.20 ஆம் திகதியன்று அனுப்பப்பட்டுள்ள அதேவேளையில், அது சம்பந்தமாக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சரின் தலைமையில் நிதி அமைச்சின் செயலாளரினதும் மற்றும் ஏனைய அலுவலர்களினதும் பங்குபற்றுகளுடன் 2026 பிப்ரவரி 02 ஆம் திகதியன்று நிதி அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. அந்த பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட உடன்பாட்டுக்கு அமைவாக உள்நாட்டில் வாகனங்களை பொருத்தும் கைத்தொழில் சம்பந்தமாகவும் அதன் பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் சம்பந்தமாகவும் சுயாதீன மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
		அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வது பொருத்தமானது என முன்மொழியப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2024 சனவரி 24		
01	அரசாங்க வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தலையீடு	இணைப்பு 03
03	இலங்கை சுங்கத்தின் திருத்தப்பட்ட சட்ட வரைவு	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் இலக்கம் MF6/4/COPA/General/2023 மற்றும் 2024.03.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
08	விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துதல்	சுங்க சேவையின் பிரச்சனைகள் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக நிதி அமைச்சின் செயலாளரின் இலக்கம் MFI/02/CUS/Sp.Ma மற்றும் 2024.02.16 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் "சுங்க அலுவலர்களின் வருகை மற்றும் வெளியேறுதல்" என்பவற்றை பதிவு செய்வதற்கு விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது சம்பந்தமாக தொடர்ந்தும் காணப்படுகின்ற பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடி பொருத்தமான நடைமுறை தீர்வு ஒன்றைப் பற்றி தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று விரல் அடையாள இயந்திரங்களில் தொழில்நுட்ப கோளாறுகள் இருந்ததன் காரணமாகவும் இந்த பணி தாமதம் அடைந்துள்ள அதேவேளையில், அந்த கோளாறுகளை தீர்த்துக் கொண்டதன் பின்னர் 2026.04.01 ஆம் திகதியிலிருந்து விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளியேறுதல் ஆகியவற்றை பதிவு செய்வதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த போதிலும்,

இல.	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
		சுங்க தொழிற்சங்கத்தின் ஒன்றியத்தின் மூலம் 2026.03.26 எனும் திகதியிட்ட கடிதத்தை சமர்ப்பித்து விடயங்களை எடுத்துக்காட்டியுள்ள அதே வேளையில் சுங்கத் திணைக்களத்திற்கு பொருத்தமான முறைமை ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் வரை விரல் அடையாளத்தின் மாதிரியை வழங்குவதில்லை என அறிவித்துள்ளனர். அதற்கு அமைவாக, விரல் அடையாள இயந்திரத்தின் பயன்பாடு பற்றி கலந்துரையாடி வழங்கக்கூடிய நடைமுறை தீர்வுகள் பற்றி தீர்மானிப்பதற்காக மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் மூவரையும் உள்ளடக்கக் கூடிய விதமாக 7 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள அதேவேளையில், அந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

பாராளுமன்ற வெளியிட்டுத் தொடர் இலக்கம் 487 இற்கான நிலையியல் கட்டளை இலக்கம் 119 (4) இன் இன் கீழ் அரச கணக்குகள் குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை மேலே உள்ளவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

விமல் எஸ்.கே. லியனகம
சுங்கப் பணிப்பாளர் நாயகம்

Excise

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரிலக்கம் : 487
நிறுவனத்தின் பெயர் : இலங்கை மதுவரித் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் விடயப் பொறுப்பு அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

(பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரிலக்கம் 487)

<table>
<tr><th>இல.</th><th><u>அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்</u></th><th><u>நிறுவனத்தினால் குறைபாட்டை சீர் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை</u></th></tr>
<tr><td>01.</td><td>அரசிறை வருமான வளர்ச்சி பொருட்டு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தலையீடு</td><td>இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட முன்மொழிவு மற்றும் செயல் திட்டத்தின் அடிப்படையில் 2025 மற்றும் 2026 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திலும் அதிக வருமானத்தை சேகரிக்க முடிந்தது.
<table>
<tr><th>வருடம்</th><th>எதிர்பார்த்த வருமானம் ரூ.பில்.</th><th>உண்மை உற்பத்தி வருமானம் ரூ.பில்.</th><th>இலக்கை அடைவதில் வளர்ச்சி %</th></tr>
<tr><td>2025</td><td>227.4</td><td>233.109</td><td>112</td></tr>
<tr><td>2026</td><td>80.5</td><td>97.38</td><td>120.14</td></tr>
</table>
</td></tr>
<tr><td>09.</td><td>மதுபான போத்தல்கள் பொருட்டு போலி ஸ்டிக்கர் பாவனை</td><td>2027 ஜனவரி 02 ஆம் திகதி முதல் புதிய வேலைத்திட்டம் ஒன்றின் ஊடான ஸ்டிக்கர் முறைமையில் தற்போது நிலவும் குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு இயலுமானவாறு செயல்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன், இது தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய முறையின் மூலம் சிசிடிவி கமரா முறைமையை நிறுவுவதன் வாயிலாக, எதிர்பார்க்கப்பட்ட முறையை விட தொழில்நுட்ப ரீதியாகவும் செலவு குறைந்ததாகவும் ஒரு முறைமையை அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.</td></tr>
</table>

பாராளுமன்ற வெளியீட்டு இல. 487 இன் பொருட்டு, நிலையியல் கட்டளை இல. 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேலே தரப்பட்டவாறு சமர்ப்பிக்கிறேன்.

மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்

M.B.N.A. Pemarathna
Commissioner General of Excise
Excise Department of Sri Lanka
No.353,Kotte Road,
Rajagiriya.

State Accoaht

(இணைப்பு *01*)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் எண் : *487*

திணைக்களத்தின் பெயர் : அரச கணக்குகள் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குக் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகம் தொடர்பான அறிக்கை குறித்து, மாண்புமிகு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் அவர்களால் நிலை ஆணை எண் *119(4)* -இன் கீழ் பாராளுமன்றத்திற்கு எடுக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல்.

எண்.	குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.	குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
01	*(i)* நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கும் நிதி நிலைமைக் கூற்றுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லை.	2023 ஆம் ஆண்டு முதல், நிதிச் செயலாற்றுகைக் கூறறிலிருந்து கணக்கிடப்பட்ட அதிகப்படியான அல்லது பற்றாக்குறையை பொது நிதிக்குச் சரிசெய்து, பொது நிதியின் இருப்பை நிதி நிலைமைக் கூற்றில் சேர்ப்பதன் மூலம், நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கும் நிதி நிலைமைக் கூற்றுக்கும் இடையே ஒரு நேரடி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
	(ii) அரசு கடன்கள் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், அரசு கணக்குகளில் பிரதிபலிக்காதது.	2023 ஆம் ஆண்டுக்கான நிதி நிலைமைக் கூற்றுகளைத் தயாரிக்கும்போது, அந்த ஆண்டில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களைப் பயன்படுத்தி பல்வேறு திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான ஒரு வெளிப்படுத்தல் குறிப்பு சேர்க்கப்பட்டது. மேற்கண்ட குறிப்புடன் கூடுதலாக, 2024 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டுக் கடனைப் பயன்படுத்தி சொத்து உருவாக்கத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையானது, பொது உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான அரசாங்க முதலீடாக அடையாளம் காணப்பட்டு, அதன் தொடர்புடைய மதிப்பு நிதி நிலைமைக் கூறறில் ஒரு சொத்தாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

எண்.	குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.	குறைபாடுகளைச் சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை
	(ii) தேறிய சொத்து சரிசெய்தல் கணக்கு இருப்பு	2023 ஆம் ஆண்டு முதல் , தேறிய சொத்து சரிசெய்தல் கணக்கின் இருப்பை திரட்டு நிதியின் இருப்புடன் ஒருங்கிணைத்து நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சரிசெய்யப்பட்ட அந்த இருப்பு நிதிநிலைமைக் கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளது.
02	அரசாங்கத்தின் நிதி சாரா சொத்துக்களுக்கான கணக்கியல்	கணக்கில் வராத சொத்துக்களைக் கண்டறிதல், அவற்றை மதிப்பிடுதல் மற்றும் அதற்கான மதிப்புகளைப் பதிவு செய்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வெளிநாட்டுக் கடன்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான வெளிப்படுத்தல் குறிப்புகளைக் கணக்குகளில் சேர்ப்பதற்கும், நிதிநிலைமைக் கூற்றில்தொடர்புடைய மதிப்புகளை அரசாங்க முதலீட்டுச் சொத்தாக அடையாளம் காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் அவர்களின் கருத்துக்கள் தொடர்பாக, மேலே குறிப்பிட்டுள்ளபடி பாராளுமன்ற எண் *487*-க்காக நிலையான ஆணை எண் *119(4)*-இன் கீழ் அரசாங்கக் கணக்குக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களைக் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பம்- டபிள்யு. ஏ. சமந்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்
அரச கணக்குகள் திணைக்களம்

Important

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 487

திணைக்களத்தின் பெயர் : இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் தொடர்பாக, நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

இலக்கம்	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
01.	1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின்படி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பணிகள்	குழுவில் பி.க.அ இனால் வழங்கப்பட்ட பதிலே பொருந்தும்.
02.	இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்காக பரிந்துரைகளை வழங்கும் 36 நிறுவனங்கள் காணப்படுகின்றமை குழுவில் வெளிப்படுத்தப்பட்டமை.	IECD/7/1/40 ஆம் இலக்க மற்றும் 2024.08.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அரச கணக்குகள் தொடர்பான குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
03.	இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவது தொடர்பாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மென்பொருள் அமைப்பு	2024 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் இவ் அமைப்பின் பணிகள் நிறைவுசெய்யப்பட்டதுடன், அமைப்பின் பரிசோதனைகள், பயனர் பயிற்சி வழங்குதல், வாடிக்கையாளர் பயிற்சி வழங்குதல் போன்றவற்றை நிறைவு செய்ததன் பின்னர் 2024.12.31 ஆம் திகதி முதல் இவ் அமைப்பு பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டு, வாடிக்கையாளர் பதிவு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, இராஜதந்திரக் குறிப்பிற்கு (Diplomatic Note) இணங்க, இவ் அமைப்பை முழுமையாக அபிவிருத்தி செய்ததன் பின்னர், முறையான வகையில் இவ் அமைப்பின் மூலக் குறியீடு (Source Code) திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. மேலும், இராஜதந்திரக் குறிப்பிற்கு இணங்க, அமைப்பு அபிவிருத்தி நிறுவனத்தினால் 2 வருட காலத்திற்கான பராமரிப்பு மற்றும் சேவைகள் வழங்கப்பட்டதுடன், 2026 ஏப்ரல் முதல் எதிர்வரும் காலத்திற்காக அமைப்பின் அபிவிருத்திப் பணிகளுக்கு அனுசரனை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் உடன்பட்டுள்ளதுடன் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அமைப்பை அபிவிருத்தி செய்யும்போது, இலங்கை கணினி அவசரப் பிரிவு (SL-CERT) மூலம் வெளியிடப்பட்ட தரவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய அமைப்புப் பாதுகாப்பு

		வழிகாட்டல்கள் அமைப்பு அபிவிருத்தி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதற்கமைய இவ் அமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டது. மேலும், இவ் அமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர், SL-CERT நிறுவனத்தினால் அமைப்புப் பாதுகாப்புக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, அமைப்பு பாதுகாப்பான மட்டத்தில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.
04	இறக்குமதியாளர்களினால், இறக்குமதி உரிமங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவது தொடர்பாகத் தண்டனை வழங்குவதற்கான சட்டங்களைத் திருத்தம் செய்தல் மற்றும் அது தொடர்பான நடைமுறையொன்றைத் தயாரித்தல்.	கட்டளைகளை மீறும் இறக்குமதியாளர்களின் பட்டியலை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்காக, கட்டளைகளை மீறும் இறக்குமதியாளர்களின் பட்டியலைத் தீர்மானிப்பது தொடர்பான ஒழுங்குவிதிகளைப் பிரசுரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வரைவு செய்யப்பட்டு, அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் ஊடாக 2025.06.15 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரினால் கண்காணிப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அக் கண்காணிப்புகளைக் கருத்திற்கொண்டு மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து அனுதியைப் பெற்றுக் கொள்ளுமாறு අමප/25/1108/804/131 ஆம் இலக்க மற்றும் 2025.07.22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. அத்தீர்மானத்திற்கு இணங்க, குறித்த கண்காணிப்புகளையும் கருத்திற்கொண்டு, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் சட்டக் கட்டமைப்புக்குள் உள்ளடக்கக்கூடிய திருத்தங்களை மேற்கொண்டு, புதிய வர்த்தமானி அறிவித்தலை வரைவு செய்வதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதற்கமைய, சட்ட வரைஞர் திணைக்களத்தினால் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு வரைவு செய்யப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள் இத்திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதுடன், அவ் ஒழுங்குவிதிகள் வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரின் கண்காணிப்புக்காக அவ்வமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, 2026.06.03 ஆம் திகதிய மற்றும் MT /TR /12/17/04 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் கண்காணிப்புகள் கிடைத்துள்ளதுடன், அது 2026.06.04 ஆம் திகதியன்று சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. அதற்கமைய, வரைவு வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் தயாரித்து இரண்டு

		வாரங்களுக்குள் அமைச்சரவையின் அனுமதிக்குச் சமர்ப்பிக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததன் பின்னர், வர்த்தமானி அறிவித்தலை அச்சிட்டு ஒரு மாதத்திற்குள் பாராளுமன்றத்தின் அனுமதிக்குச் சமர்ப்பிக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது.
05	இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டிற்கு உட்படும் மற்றும் உட்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் அப்பொருட்களின் இயைபு முறைக் குறியீடுகள் (HS Codes)	தற்போது இலங்கைக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள், இயைபு முறைக் குறியீடுகளுக்கு அமைய சுமார் 8576 உள்ளன. அவற்றுள் 1661 இயைபு முறைக் குறியீடுகள் 2026.04.30 ஆம் திகதியாகும் போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, 1093 HS குறியீடுகளுக்கு உரிமங்கள் வழங்கப்படுவதுடன், 516 HS குறியீடுகளுக்கான உரிமங்கள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் 52 HS குறியீடுகளுக்குரிய பொருட்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது உரிமங்கள் வழங்கப்படும் பொருட்களை இறக்குமதி செய்யும்போது, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குவதற்குப் பரிந்துரைகளை வழங்கும் 31 நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் அந்த 31 நிறுவனங்களுடன் நீண்ட கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு, ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய HS குறியீடுகளை சரியாக இனங்காண்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கமைய தொடர்புடைய நிறுவனங்களின் பரிந்துரைகளின் பேரில் உரிமங்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திணைக்களமானது ஏதேனும் ஒரு பொருளை உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்துவது, அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் ஏதேனும் ஒரு பொருள் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களினால் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கு அமையவேயாகும். அதற்கமைய, ஏதேனும் ஒரு பொருளை உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த வேண்டும் என ஏதேனும் ஒரு நிறுவனம் கொள்கைத் தீர்மானமொன்றை எடுத்து இத்திணைக்களத்திற்கு அறிவித்ததன் பின்னர், அப்பொருட்களின் உரிமக் கட்டுப்பாட்டிற்குரிய அவசியமான பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, 2026.04.30 ஆம் திகதிக்குப் பின்னர் இறக்குமதி உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்துவதற்கோ அல்லது உரிமக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்குவதற்கோ கோரிக்கைகள் இத்திணைக்களத்திற்கு

		கிடைக்கப்பெறவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றேன். அதன்படி, இத்திணைக்களத்தினால் உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கி, உரிமத் தேவையிலிருந்து விடுவிப்பதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மின்சார வாகன இறக்குமதியை முறைப்படுத்துவதற்காக நிதியமைச்சு மற்றும் இலங்கைச் சுங்கத்துடன் இணைந்து இயைபு முறைக் குறியீடுகளுக்கு (HS Code) தேசிய உப பிரிவுகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாட்டில் உப்புத் தட்டுப்பாடு நிலவிய காலப்பகுதியில், அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய உப்பு இறக்குமதி உரிமத் தேவை தற்காலிகமாக நீக்கப்பட்டதுடன், தற்போது உப்பு இறக்குமதியானது மீண்டும் உரிமத் தேவைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, அரிசி தட்டுப்பாடு நிலவிய காலங்களிலும் நிபந்தனைகளுடன் அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது.
06	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 1 (5.1) மதுபான உற்பத்திக்கான ஸ்பிரிட் போன்றவற்றுக்கு உரிமங்களை வழங்கும் கொள்கை	மதுபான உற்பத்திக்கான ஸ்பிரிட் (Alcohol/Ethanol) இறக்குமதி செய்வதற்கு உரிமங்களை வழங்குவற்கு தற்போது பின்பற்றப்படும் முறையை தொடர்ந்து பின்பற்றுமாறு அரசாங்க நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் FP/R/01/03/10/02/03/ Ethanol ஆம் இலக்க மற்றும் 06.01.2025 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
07	வாகன இறக்குமதிக்கு சனாதிபதி செயலகத்தினால் தேசிய கொள்கையொன்றைத் தயாரித்தல்	வாகன இறக்குமதிக்கான தேசியக் கொள்கையைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் முன்வைக்கப்பட்ட, 2024.09.12 ஆம் திகதிய மற்றும் 24/1945/604/208 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அடிப்படையில், 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்படும் மோட்டார் வாகன இறக்குமதிக்காக விதிக்கப்பட்டிருந்த தற்காலிக இடைநிறுத்தத்தை மூன்று கட்டங்களில் நீக்குவதற்கு, 2024.09.13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. i. 2024.12.18 ஆம் திகதிய 2415/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ii. 2025.01.27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் iii. 2025.01.31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

08	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 1 (5.4) பரிசுத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பின்னர் வெவ்வேறு தரப்பினருக்கு பரிமாற்றம் செய்தல்.	பரிசுத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை, பின்னர் வெவ்வேறு தரப்பினருக்குப் பரிமாற்றம் செய்வதற்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டால், இத்திணைக்களத்தின் முன் அனுமதியின்றி குறித்த பரிமாற்றத்திற்கான பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம் என அறிவித்து, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் IECD/02/2023/004 ஆம் இலக்க மற்றும் 2024.02.07 ஆம் திகதிய கடிதம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. IECD/02/2023/004 மற்றும் 2024.04.09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி, பரிசுத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 208 வாகனங்களின் தகவல்களுக்கிடையே 24 வாகனங்கள் மாத்திரமே முதலாம் பதிவிலிருந்து 05 ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் ஏனைய தரப்பினருக்கு உரிமையாளர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாகனங்கள் 24 இனுள் 20 வாகனங்களின் நிபந்தனைகளை நீக்குவதற்காக இத்திணைக்களத்தினால் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய, அந்த 20 வாகனங்களில் 19 வாகனங்களின் தகவல்களை உள்ளடக்கிய 16 கோப்புகள் அரச கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வாகனங்களின் தகவல்களை உள்ளடக்கிய கோப்புகள் எதிர்காலத்தில் கணக்காய்விற்காக அனுப்பிவைக்கப்படவுள்ளன. மேலும், 2024.01.23 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரச கணக்குகள் பற்றிய குழுவுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க, இவ்வாகனங்களின் இறக்குமதி மற்றும் பதிவு தொடர்பாக முழுமையான பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்காக சுயாதீன குழுவொன்றை நியமிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கமைய, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பரிசோதனையின் தற்போதைய நிலைமை குறித்து இத்திணைக்களத்திற்குத் தெளிவுபடுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதையும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
09	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 1 (6.1)	கட்டளைகளை மீறும் இறக்குமதியாளர்களின் பட்டியலை வர்த்தமானியில் வெளியிடுவதற்குரிய ஒழுங்குவிதிகளை

		விதிப்பதற்காக, கட்டளைகளை மீறும் இறக்குமதியாளர்களின் பட்டியலைத் தீர்மானிப்பது தொடர்பான ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வரைவு செய்யப்பட்டு, அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலம் 2025.06.15 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டது. அவ்வமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரினால் கண்காணிப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அக் கண்காணிப்புகளைக் கருத்திற்கொண்டு மீண்டும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைப/25/1108/804/131 ஆம் இலக்க மற்றும் 2025.07.22 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. அத் தீர்மானத்திற்கு இணங்க, உரிய கண்காணிப்புகளைக் கருத்திற்கொண்டு, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் சட்டக் கட்டமைப்புக்குள் உள்ளடக்கக்கூடிய திருத்தங்களை மேற்கொண்டு, புதிய வர்த்தமானி அறிவித்தலை வரைவு செய்வதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதற்கமைய, சட்ட வரைஞர் திணைக்களத்தினால் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு வரைவு செய்யப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள் இத்திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதுடன், அவ் ஒழுங்குவிதிகள் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்பிற்காக அவ்வமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, 2026.06.03 ஆம் திகதிய மற்றும் MT/TR/12/17/04 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் கண்காணிப்புகள் கிடைத்துள்ளதுடன், அது 2026.06.04 ஆம் திகதியன்று சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. அதற்கமைய, வரைவு வர்த்தமானி அறிவித்தலை மீண்டும் தயாரித்து இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையின் அனுமதிக்குச் சமர்ப்பிக்க எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததன் பின்னர், வர்த்தமானி அறிவித்தலை அச்சிட்டு ஒரு மாதத்திற்குள் நாடாளுமன்றத்தின் அனுமதிக்குச் சமர்ப்பிக்க எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.
10	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 1 (6.2)	முன்னைய அரச கணக்குகள் பற்றிய குழுவின் கட்டளைகளுக்கு இணங்க, குற்றப் புலனாய்வுத்

	பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு இறக்குமதி உரிமங்களை வழங்குதல்	திணைக்களத்தினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
11	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 1 (6.4) மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த பதிவு சான்றிதழ்களைப் பயன்படுத்தி காலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்தல்.	மருந்தொன்றை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் குறித்த மருந்தின் மொத்த ஆயுட்காலத்தில் குறைந்தது 75% ஐப் பேணிக்கொள்வது சம்பந்தமாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த அறிக்கை, IECD/7/1/40 ஆம் இலக்க மற்றும் 2024.08.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இத்தகவல்கள் அரச கணக்குகள் பற்றிய குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
12	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 2. (2.1)	அபிவிருத்தி செய்யப்பட்ட STRATLINK அமைப்பிற்கும் இலங்கைச் சுங்கத்தின் ஆசிகுடா (ASYCUDA) அமைப்பிற்கும் இடையிலான அமைப்பு இணைப்பு, பயன்பாட்டு மென்பொருள் இடைமுகம் (API) ஊடாக நிறுவப்பட்டு தரவுப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, வழங்கப்படும் உரிமங்கள் தொடர்பான தரவுகள் இலங்கைச் சுங்கத்திற்கு அனுப்பப்படுவதுடன், சுங்க வெளிப்படுத்துகை (CUSDEC) தொடர்பான தரவுகள் STRATLINK அமைப்பிற்கு அனுப்பப்படுகின்றன. உரிமங்கள் பற்று வைக்கப்பபட்டதன் பின்னர், பொருட்களை விடுவிப்பதற்கான அனுமதியும் (Green Approval) STRATLINK அமைப்பின் மூலம் ASYCUDA அமைப்பிற்குத் தானியங்கி முறையில் அனுப்பப்படுகின்றது.
13	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 2. (2.2-ii) சீனி இறக்குமதிக்கான உரிம முறைமை 2020.10.30 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், உரிமங்களை வழங்குவது 2020.11.18 ஆம் திகதி வரை தாமதமடைந்தமையினால், அக் காலப்பகுதிக்குள் உரிமங்கள் இன்றி சீனி இறக்குமதி செய்வதற்கு 18 இறக்குமதியாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தமை. 2016.02.11 ஆம் திகதிய மற்றும் 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, CIF பெறுமதியில் 5% மேலதிகக் கட்டணமாக அறவிடப்பட வேண்டும் என்றபோதிலும், உரிமங்களின்றி இறக்குமதி செய்யப்பட்டிருந்த சீனித் தொகுதிகளின் CIF பெறுமதியில் 2% மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமை.	2024.01.23 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய குழுவில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதன் போது குழுவிற்கு தெளிவுகள் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் குழுவினால் இவ் விடயம் தொடர்பாக மீண்டும் கட்டளையொன்று வழங்கப்படவில்லை.

14	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 2. (2.2-iii)	2024.01.23 ஆம் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய குழுவில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதன் போது குழுவிற்கு தெளிவுகள் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் குழுவினால் இவ் விடயம் தொடர்பாக மீண்டும் கட்டளையொன்று வழங்கப்படவில்லை.
15	கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 2. (2.4) சீஷெல்ஸ் இலிருந்து தாய்லாந்து நோக்கிப் பயணித்த மீன் கொள்கலன்களைக் ஏற்றிய கப்பலொன்று, கொழும்புத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள கடல் பகுதியில் தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளாகி மின்சாரம் தடைப்பட்டதன் காரணமாக இலங்கைத் துறைமுக அதிகாரசபையை வந்தடைந்ததுடன், வெளிநாட்டுக் கப்பலின் உள்ளூர் முகவருடாகக் கண்டறியப்பட்ட உள்ளூர் தனியார் நிறுவனமொன்றிற்கு, சேதனப் பசளை உற்பத்திக்காக இம்மீன் கொள்கலன்கள் 2022.03.09 ஆம் திகதியன்று விற்கப்பட்டமை தொடர்பான கணக்காய்வு விசாரணை.	இக் கேள்வி தொடர்பாக 2024.06.12 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் இறுதியாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இவ்விடயம் குறித்த முன்னேற்றங்கள் அடங்கிய அறிக்கையானது, நிதி அமைச்சின் செயலாளரின் MF06/10/Import & Export/COPA/2024 ஆம் இலக்க மற்றும் 2024.06.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் பிரதியுடன் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
16	**கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக் குறிப்பு 2. (2.5)** விசேட அந்நிய செலாவணி நெருக்கடியொன்று நாட்டில் நிலவிய ஒரு சந்தர்ப்பத்தில் மற்றும் எதனோல் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் 1,960,000 டொலர் பெறுமதிக்கு லங்கா சீனி நிறுவனத்திற்கு எதனோல் உற்பத்திக்காக அவசியமான மொலசஸ் இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி உரிமமொன்றை 2022.01.21 ஆம் திகதி வழங்குவதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தமை.	எதனோல் உற்பத்திக்குத் தேவையான மொலசஸ் இறக்குமதி உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், நிதியமைச்சின் செயலாளரின் MF06/10/Import & Export /COPA/2024 ஆம் இலக்க மற்றும் 2024.03.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 487 இற்கான நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்படும் அறிக்கைகள் தொடர்பாக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கண்காணிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை மேலுள்ளவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

டீ.டீ. உபுல்மலீ பிரேமதிலக்க
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம்
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்